இயல் 4

தமிழ்ப் பெயர்சொற்கள் பற்றிய விளக்கமொழியியல் ஆய்வு

4.1. முன்னுரை

தமிழ் ஒரு திராவிட மொழி. இம்மொழி வினைச்சொல்லை இறுதியாகக் கொண்ட வாக்கியங்களை உடையதாகும். இம்மொழி இலக்கணச் செயற்பாங்குகளை (அதாவது இலக்கணப் பொருண்மைகளை) உருபனியல் நிலையில் வெளிப்படுத்தும் ஒட்டுக்கள் நிறைந்த மொழியாக விளங்குகிறது. இம்மொழி உள்ள ஒவ்வொரு வேர் உருபனும் ஆயிரக்கணக்கான சொற்களின் உருவாக்கத்திற்கு (அதாவது திரிபு மற்றும் ஆக்க வடிவுகளின் உருவாக்கத்திற்கு) அடிப்படையாக அமைகிறது. தமிழ் வாக்கியங்கள் எழுவாய்தொடரையும் வினையையும் கொண்ட அமைப்பாகவோ எழுவாய்த் தொடரையும் செயப்படுபொருள் தொடரையும் வினையும் கொண்ட அமைப்பாகவோ அமையும். **விளக்க மொழியியல் ஆய்வு அடிப்படையில் பெயர்ச் சொற்கள் என்பன வேற்றுமைக்காகவும் பன்மை எண்ணுக்காகவும் திரிபுருவன. பெயர்கள் பெயர்த்தொடர்களின் தலைச் சொல்லாக அமையும். பெயர்த்தொடர்கள் எழுவாயகவோ செயப்படுபொருளாகவோ அல்லது பிற வேற்றுமைத் தொடர்களாகவோ செயல்புரியும். பெயர்ச் சொற்கள் காலத்திற்காகத் திரிபுறுவதில்லை; இருப்பினும் வினையாலணையும் பெயர்கள் கால ஒட்டுக்களைக் கொண்டிருக்கும்.**

4.2. பெயர்ச் சொற்களின் உருபனியல் அமைப்பு

தமிழ்ச் சொற்களை உருபனியல் அடிப்படையிலும் தொடரியல் அடிப்படையிலும் பெயர்ச்சொல், வினைச்சொல், பெயரடை, வினையடை என்ற முக்கியமான சொல் வகுப்புகளாகப் பகுப்பர். இவற்றில் பெயர்ச்சொற்கள் வேற்றுமை உருபுகளும் பன்மையை உணர்த்தும் ஒட்டும் ஏற்று வரும். மேலும் பெயர்கள் *ஆக, ஆய், ஆன* என்ற ஒட்டுக்களையும் ஏற்று வரும்.

4.2.1. பெயரின் திரிபு

பெயர்கள் வேற்றுமைக்கும் எண்ணிற்கும் திரிபுறும் எனப் பார்த்தோம். திரிபுற்ற ஒரு பெயர்ச்சொல் பெயர்ப்பகுதி, எண் மற்றும் வேற்றுமை என்ற மூன்று உருபன்களின் ஒலியனியல் உட்படுத்தம் ஆகும். இதைப் பி**ன்**வருமாறு வெளிப்படுத்தலாம்:

பெயர் (+ எண்) (+ வேற்றுமை)

ஒலியனியல் நிலையில் திரிபுற்ற பெயர் வடிவம் மேற்சொன்ன மூன்று உருபன்களையும் மெய்ப்படுத்தும் செய்யும் மூன்று உருபுகளை மட்டும் எப்பொழுதும் கொண்டிருப்பதில்லை. ஏனென்றால் பெயர்த் திரிபுன் போது இலக்கண உருபன்களை மெய்ப்படுத்தம் செய்யும் எண் மற்றும் வேற்றுமைப் பின்னொட்டுகள் தவிர சொல் அல்லது இலக்கணச் செயல்பாடில்லாத சில ஒலியனியல் ஒட்டுக்களும் வரலாம். இவ்வொலியனியல் பின்னொட்டுகள் வெற்றுருபன்கள் (empty morpheme) எனப்படும். அதாவது அவை ஒரு உருபனை உருப்படுத்தம் செய்யாது. இலக்கண நூல்களில் இவ்வுருபனியல் பின்னொட்டுகள் சாரியைகள் (inflectional increments) எனப்படும். கட்டாய மற்றும் விருப்பு ஒலியனியல் பின்னொட்டுகள்/சாரியைகள் இவற்றுக்கிடையில் வேறுபாட்டைக்

கருதலாம். நாம் கட்டாயத் திரிபு சாரியைகளைத் திரிபு (oblique) சாரியைகள் அல்லது திரிபு ஒட்டுகள் என்றும் கூறலாம். விருப்பு**த்** திரிபு சாரியைகளை ஒலி நிரவல் (euphonic) சாரியை அல்லது ஒலி நிரவல் பின்னொட்டுகள் என்றும் குறிப்பிடலாம்.

உள்ளுறை அமைப்பில் இரு இலக்கண உருபன்கள் (ஒன்று எண்**ணா**கவும் மற்றொன்று வேற்றுமையாகவும் வரும்) பெயர் உருபனுடன் வரும். ஒலியனியல் நிலையில் நான்கு வகையான உருபுகள் (பின்னொட்டுகள்) பெயர்ப் பகுதியுடன் சேர்ந்து வரும். அவை பின்வருவனவாகும்.

1. பன்மைப் பின்னொட்டு
2. திரிபு பின்னொட்டு (சாரியை)
3. ஒலிநிரவல் பின்னொட்டு (சாரியை)
4. வேற்றுமைப் பின்னொட்டு

இந்நான்கு பின்னொட்டுகளும் பெயர்ப்பகுதியுடன் பின்வருமாறு வரும்:

1. பெயர் எண்ணுக்காகத் திரிபுறும்போது பன்மைப் பின்னொட்டு பெயர்ப் பகுதியில் சேர்க்கப்படும்.

பெயர்ப் பகுதி + பன்மைப் பின்னொட்டு

எ.கா.

வீடு- கள், எலி- கள்

2. பெயர் வேற்றுமைக்காகத் திரிபுறும்போது வேற்றுமைப் பின்னொட்டு பெயர்ப் பகுதியுடன் நேரிடையகவோ திரிபுப் பகுதியுடனோ சேர்க்கப்படும்.

பெயரின் திரிபுப் பகுதி பெயருடன் திரிபு ஒட்டைச் சேர்ப்பதனாலோ நிலை மொழியின் இறுதி மெய்யொலியை இரட்டுவதாலோ உருவாக்கப்படும். ஒலி நிரவல் சாரியை *இன்* (சில நேர்வுகளில் –*அன்*) பெயர் அல்லது திரிபுப் பகுதிக்கும் வேற்றுமைப் பின்னொட்டுக்கும் இடையில் விருப்பாக வரும். இவ்வுருபன் அமைப்பொழுங்கைப் (morphotactics) பின்வருமாறு தரலாம்:

பெயர்ப்பகுதி / திரிபுப்பகுதி + (ஒலிநிரவல் சாரியை) + வேற்றுமைப் பின்னொட்டு

வீடு- கள்(-இன்)- ஐ > வீடுகளை/வீடுகளினை

கை-கள்(-இன்)- ஐ > கைகளை/கைகளினை

பெயர் அல்லது திரிபுப் பகுதியுடன் பன்மை, வேற்றுமை மற்றும் ஒலியன் ஒட்டுகளைச் சேர்க்கும்போது பல உருபொலியனியல் விதிகள் செயல்படும். எடுத்துக்காட்டாக இடைவெளியைத் (hiatus) தவிர்க்க *வ்* அல்லது *ய்* என்ற ஒலியன் வடிவு உடன்படுத்தியாகச் (glide) சொருகப்படும். இதைப்பற்றி பின்னால் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

4.2.2 பெயர்ப் பகுதி

பெயர்ப்பகுதி என்பது திரிபுப் பின்னொட்டுகள் சேர்க்கப்படாத பெயர் வடிவமாகும். இவ்வடிவில்தான் பெயர்கள் அகராதியில் பட்டியலிடப் பட்டுள்ளன. இவை எழுவாய் வடிவிலும் வரும். பெயர்ப்பகுதி தனியாகவோ கலப்பாகவோ வரலாம். பெயர்ப்பகுதி ஒரு பெயர் வேரைக்

கொண்டிருக்கும் (எ.கா. *கல்*); ஒரு கலவைப் பெயர்ப்பகுதி ஒரு வேரையும் (எ.கா. ஒரு வினைப் பகுதியும்) ஒரு ஆக்க ஒட்டையும் (எ.கா. பெயராக்கப் பின்னொட்டு *ப்பு*) கொண்டிருக்கலாம்.

[பெ[வி படி] -ப்பு]

அல்லது அது ஒரு வேரையும் பால் பின்னொட்டையும் கொண்டிருக்கலாம்.

மாண-வ்-அன்>மாணவன், மாண-வ்+இ > மாணவி, மாண-வ்-அர்> மாணவர்

தலை-வ்-அன்> தலைவன், தலை-வ்-இ> தலைவி, தலை-வ்-அர் > தலைவர்

இதில் -*அன்* என்பது ஆண்பால் பின்னொட்டாகும். -*இ* என்பது பெண்பால் பின்னொட்டாகும். -*அர்* என்பது பலர்பால் (உயர்வுப் பன்மை) பின்னொட்டாகும். பல பெயர்ப்பகுதிகள் *அ* என்பதில் முடியும் வேரையும் பகுதியை உருவாக்கும் (stem forming) பின்னொட்டான *ம்* என்பதையும் கொண்டிருக்கும்.

மர-ம் > மரம், பழ-ம் > பழம், நில-ம்> நிலம், திட்ட-ம்> திட்டம்

4.2.3 திரிபுப் பகுதி

சில பெயர்கள் பெயர்ப்பகுதியுடன் திரிபுப்பகுதி (oblique stem) என்று அழைக்கப்படும் திரிபுப் பெயர் வடிவத்தையும் கொண்டிருக்கும். சில திரிபுப் பகுதியைக் கொண்டிருக்காது. திரிபுப்பகுதிக்கு நான்கு மடங்கு செயல்பாடும் சூழல் வருகையும் இருக்கும். மேற்சொன்ன எடுத்துக்காட்டில் காட்டியுள்ளது போல் முதலாவது, இப்பெயர் வடிவத்துடன் தான் வேற்றுமைப் பினொட்டுகள் சேர்க்கப்படுகின்றன;

இரண்டாவது பெயரின் வடிவம்தான் பெயர் ஒரு அடையாகக் கிழமைச் செயல்பாட்டுடன் தலைமைப் பெயருக்கு முன்னால் வரும் வடிவமாகும்; மூன்றாவது இப்பெயர் வடிவம்தான் சுட்டுப்பெயர் கட்டுமானத்தில் முதல் பெயர்த் தனிமமாக வரும் வடிவமாகும். நான்காவது இப்பெயர் வடிவம்தான் பல பின்னுருபுகளுக்கு முன்வரும் வடிவமாகும். திரிபுப்பகுதியாக வரும். பெயர்கள் திரிபுப் பகுதியாக வருமா வராதா என்பதன் அடிப்படையிலும் திரிபு அடியாக வந்தால் அவற்றின் ஒலியனியல் வடிவம் அடிப்படையிலும் பெயர்களை நான்கு வகுப்புகளாக வேறுபடுத்திக் காட்டலாம்.

1) த்து என்ற திரிபு ஒட்டு உடைய திரிபுப் பகுதி
2) *அற்று* என்ற திரிபு ஒட்டுடைய திரிபுப் பகுதி
3) மெய்யொலிகள் இரட்டிப்பால் உருவாக்கப்படும் திரிபுப் பகுதி
4) மாற்றுப் பெயர்களின் திரிபுப் பகுதி

4.2.3.1. *த்து* என்ற திரிபு ஒட்டு உடைய திரிபுப் பகுதி

இவ்வகுப்பில் வரும் பெயர்கள் *அம்* என்ற இறுதி அசையைக் கொண்டிருக்கும் (எ.கா. மரம், நிலம், பழம்). இப்பெயர்கள் அவற்றின் இறுதி ஒலியனான *ம்* என்பதை *த்து* என்ற திரிபு ஒட்டால் இடம்பெயர்த்துத் திரிபுப் பகுதியை உருவாக்கும்.

மர-த்து > மரத்து, பழ-த்து>பழத்து, நில-த்து>நிலத்து, தோட்ட-த்து>தோட்டத்து

இத்திரிபுப்பகுதியின் வருகையின் நான்கு சூழல்கள் கீழே எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

1. திரிபுப் பகுதி + வேற்றுமை ஒட்டு

தோட்ட-த்த்-இல் > தோட்டத்தில்

2. திரிபுப்பகுதி + தலைமைப் பெயர்

தோட்ட-த்து-க் கதவு > தோட்டத்துக் கதவு

3. திரிபுப் பகுதி + பெயர் (பெயர்-பெயர் கூட்டில்)

தோட்ட- த்து- ப் பூ > தோட்டத்துப் பூ

4. திரிபுப் பகுதி- பின்னுருபு

தோட்ட-த்து-ப் பக்கம் > தோட்டத்துப் பக்கம்

திரிபு வடிவுகளைத் தொடர்ந்து வரும் பெயர்களின் அல்லது பின்னுருபுகளின் தொடக்க அடைப்பு ஒலிகளாக *க், ச், த், ப்* என்பனவற்றின் அடிப்படையில் முன்னர் வரும் திரிபுப் பகுதி சம்பந்தப்பட்ட அடைப்பொலிக்கு இரட்டித்த ஒலியைக் கொண்டிருப்பதை உணராலாம்.

4.2.3.2. *அற்று* என்ற திரிபு ஒட்டுடைய திரிபுப் பகுதி

இவ்வகுப்பு ஐந்து பெயர்களைக் (மாற்றுப் பெயர்களை) கொண்டிருக்கும். இவை ஒரே திரிபு ஒட்டை ஏற்கும் என்பதன் அடிப்படையில் பொதுவான பண்பைக் கொண்டிருக்கின்றன. இவை பல, சில,அவை மற்றும் எல்லாம் என்பனவாகும். இப்பெயர்கள் அவற்றின் திரிபுப் பகுதியை *அற்று* என்ற திரிபு ஒட்டு சேர்க்கப்படும்போது உருவாக்கும். எல்லாம் என்பதில் *ம்* என்பது நீக்கப்படும். *இவை*, *அவை* என்பனவற்றில் *ஐ* என்பது *அ* என சுருக்கப்படும்.

பல-வ்-அற்று > பலவற்று

அ-வ்-அற்று > அவற்று

எல்லா-வ்-அற்று > எல்லாவற்று

இந்த வகையில் படும் திரிபுப் பகுதி வரும் சூழல்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

1. திரிபுப் பகுதி + வேற்றுமை ஒட்டு

   பல-வ்-அற்-ஓடு > பலவற்றோடு

2. திரிபுப் பகுதி + தலைமைப் பெயர்

   பல- வ்- அற்-இன் விலை > பலவற்றின் விலை

3. திரிபுப் பகுதி + முன்னுருபுத் தொடர்

   பல-வ்- ற்-இன் பக்கம் > பலவற்றின் பக்கம்

இவ்வகையிற்படும் பெயர்களுடன் (மாற்றுப்பெயர்களுடன்) *இன்* என்ற ஒலிநிரவல் சாரியை கட்டாயமாக அற்று என்ற திரிபு ஒட்டுக்குப் பின்னால் அவை பெயர் விசேடணமாக வரும்போதோ அல்லது பின்னுருபால் தொடரப்படும்போதோ வரும்.

4.2.3.3 மெய்யொலிகள் இரட்டிப்பால் உருவாக்கப்படும் திரிபுப் பகுதி

டு அல்லது *று* என்ற அசைகளால் இறுதியுறும் எல்லாப் பெயர்களும் இவ்வகுப்பில் அடங்கும் (எ.கா. *வீடு, நாடு, ஆறு, கிணறு*). இவ்வகுப்பைச் சார்ந்த பெயர்கள் இறுதி அசையின் மெய்யெழுத்துக்கள் இரட்ட திரிபு அடியை உருவாக்கும்.

வீடு > வீட்டு, நாடு > நாட்டு, ஆறு > ஆற்று, கிணறு > கிணற்று

இவ்வகையிற்படும் திரிபு அடியின் வருகைச் சூழல் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

1. திரிபுப் பகுதி + வேற்றுமை ஒட்டு

வீட்- ட்-இல்> வீட்டில்

கிணற்- ற்- இல்>கிணற்றில்

2. திரிபுப் பகுதி + தலைமைப் பெயர்

வீட்-டு-க் கதவு>வீட்டுக் கதவு

கிணற்- று-ச் சுவர்>

3. திரிபுப் பகுதி + பெயர்

வீட்-டு வேலை > வீட்டுவேலை

கிணற்-று-த் தண்ணீர் > கிணற்றுத் தண்ணிர்

4. திரிபுப் பகுதி + முன்னுருபுத் தொடர்

வீட்-டு-ப் பக்கம் >வீட்டுப் பக்கம்

கிணற்-று-ப் பக்கம் >கிணற்றுப் பக்கம்

மேற்சொன்ன மூன்று வகுப்பில் படாத பெயர்ச் சொற்கள் யாவும் பெயரின் நான்காவது வகுப்படிச் சாரும். இவைகள்தாம் பெயர்களில் பெரும்பான்மையாகும் பிற வகுப்பைச் சார்ந்த பெயர்கள் அவற்றின் திரிபுப் பகுதியாக வருமிடங்களில் இவை அவற்றின் பெயர்ப் பகுதியாக வரும்.

1. திரிபுப் பகுதி + வேற்றுமை ஒட்டு

தலை-ய்-இல் > தலையில்

2. திரிபுப் பகுதி + தலைமைப் பெயர்

தலை மயிர்

3. திரிபுப் பகுதி + பெயர்

தலை வலி

4. திரிபுப் பகுதி + பின்னுருபு

தலை மேல்

4.2.3.4. மாற்றுப் பெயர்களின் திரிபுப் பகுதி

மாற்றுப் பெயர்கள் பெயர்ச்சொல்லின் வகைப்பாட்டின் ஒரு அடைப்பட்ட துணைக் குழுமமாகும். மாற்றுப் பெயர்கள் பெயர்களின் துணைக்குழுமமாகக் குழுமப்படுவதின் காரணம் பெரும்பாலும் தொடரியல் சார்ந்ததாகும். எனவே மாற்றுப் பெயர்கள் தொடரியல் வகைப்பாட்டைச் சார்ந்ததாகக் கருதப்படிகின்றன. ஐந்து வகைப்படும் மாற்றுப் பெயர்களின் ஒரு வகைக்கு அதாவது மூவிட மாற்றுப் பெயர்களுக்குத் திரிபுப்பகுதி இருக்கின்றது. முதலாவது, இரண்டாவது மற்றும் நான்காவது இடமாற்றுப் பெயர்களும், மூன்றாவது இடப்பன்மை அஃறிணை மாற்றுப் பெயர்களுக்கும் திரிபுப்பகுதி இருக்கின்றது. முதலாவது, இரண்டாவது மற்றும் நான்காவது மாற்றுப் பெயர்கள் அவற்றின் திரிபுப் பகுதியை அவற்றின் மாற்றுப்பெயர்கள் வடிவின் ஒலியனியல் மாற்றத்தால் உருவாக்கின்றது. படர்க்கை இடப் பன்மை அஃறிணை மாற்றுப்பெயர்களுக்கு அற்று திரிபு ஒட்டுபெற்ற திரிபுப்பகுதி இருக்கின்றது. பின்வரும் அட்டவணை மாற்றுப் பெயர்களையும் அவற்றின் திரிபு வடிவங்களையும் காட்டும்.

இடம்	**மாற்றுப்பெயர்**	**திரிபு வடிவம்**
தன்மை ஒருமை	நான்	என் (ன்), என
முன்னிலை ஒருமை	நீ	உன் (ன்), உன்
படர்க்கை ஒருமை ஆண்பால்	இவன்/அவன்	இவன்/அவன்

படர்க்கை ஒருமை பெண்பால்	இவள்/அவள்	இவள்/அவள்
படர்க்கை ஒருமை அஃறிணை	இது/அது	இது/அது
படர்க்கை ஒருமை ஆண்பால் / பெண்பால்	இவர்/அவர்	இவர்/அவர்
தற்சுட்டு ஒருமை	தான்	தன்/தன
தன்மைப் பன்மை	நாங்கள்/நாம்	எங்கள்/ நம்(ம்), நம
முன்னிலைப் பன்மை	நீங்கள்	உங்கள்
படர்க்கைப் பன்மை ஆண்பால்/ பெண்பால்	இவர்கள்/அவர்கள்	இவர்கள்/அவர்கள்
படர்க்கை பன்மை/ அஃறிணை	இவை/அவை இவைகள்/அவைகள்	இவற்று/அவற்று இவைகள்/அவைகள்
தற்சுட்டுப் பன்மை	தாங்கள்	தங்கள்

மேற்சொன்ன அட்டவணைப்படி *நான்* என்ற தன்மைப் பெயருக்கு மூன்று திரிபுப் பகுதி வடிவங்கள் இருக்கின்றன: *என்*, *என்ன்*, *என*. *என* நான்காவது வேற்றுமைப் பின்னொட்டுக்கு முன்னும், *என்ன்* என்பது *இடம்* என்ற பின்னுருபுக்கு முன்னும், *என்* தலைமைப் பெயருக்கு முன்னும் பிற பின்னுருபுகளுக்கு முன்னும் வரும்.

1. திரிபுப் பகுதி + வேற்றுமை ஒட்டு

   என-க்கு > எனக்கு, என்ன்-இடம் > என்னிடம்

2. திரிபுப் பகுதி + தலைமைப் பெயர்

என் வீடு

3. திரிபுப் பகுதி + பின்னுருபு

என் பக்கம்

4.2 3.5. ஒலி நிரவல் சாரியைகள் *இன்*, *அன்*

முன்னர் *த்து*, *அற்று* என்ற திரிபுச் சாரியைகளைப் பற்றிப் பார்த்தோம். இவை தவிர *இன்*, *அன்* என்ற ஒலியனியல் பின்னொட்டுக்கள் வடிவத்திலிருக்கும் விருப்புத் திரிபுச் சாரியைகளும் இருக்கின்றன. இவை ஒலி நிரவல் முன்னொட்டுக்கள் என்று அழைக்கப்பெறும். *இன்* என்பது எல்லாப் பெயர்களுடன் மட்டும் வரும். *அன்* என்பது *இது* மற்றும் *அது* என்ற மாற்றுப்பெயர்களுடன் மட்டும் வரும். இவ்வொலி நிரவல் ஒட்டுக்களான *இன்* என்பதும் *அன்* என்பதும் வரும் சூழல்கள் கீழே தரப்பட்டுள்ளன:

1. வேற்றுமைக்காகத் திரிபுற்ற பெயர்களில் ஒலிநிரவல் பின்னொட்டு பெயர்ப்பகுதிக்கும் அல்லது திரிபுப் பகுதிக்கும் அல்லது பன்மை ஒட்டுக்கும் வேற்றுமைப் பின்னொட்டுக்கும் இடையில் வரும்.

கை(-இன்)-ஆல் > கையால்/கையினால்

அத்(-அன்)-ஆல் > அதால்/அதனால்

யுத்த-த்த்(-இன்)-ஆல் > யுத்தத்தால்/யுத்தத்தினால்

கற்-கள்(-இன்)-ஆல் >கற்களால்/கற்களினால்

2. அடையாக வரும் பெயர்களுடன் உடைமை வேற்றுமைச் செயல்பாட்டில் தன்மைப் பெயருக்கு முன் வரும்.

கை(-ய்-இன்) புத்தகம் > கையின் புத்தகம்

மர(-த்த்-இன்) கிளை > மரத்தின் கிளை

பையன்-கள்(-இன்) சட்டை > பையன்களின் சட்டை

3. ஒரு கிளமைப் பின்னொட்டுக்கு முன் விருப்பாக, சில பெயர்களுடன் கட்டாயமாகப் பெயர்ப்பகுதிக்கு அல்லது திரிபுப்பகுதிக்கு அல்லது பன்மை ஒட்டுக்குப் பின் வரும்.

சாவி(ய்-இன்) மூலம் > சாவியின் மூலம்

அத்(-அன்) மூலம் > அதன் மூலம்

மர(-த்த்(-இன்) மூலம் > மரத்தின் மூலம்

ஆணி-கள்(-இன்) மூலம் >ஆணிகளின் மூலம்

4.2.4. எண் குறிப்பு

தமிழில் ஒருமை, பன்மை என்ற இரண்டு எண்கள் இருக்கின்றன. பன்மை ஒட்டு *-கள்/-க்கள்* என்பதால் உருப-ஒலியனியல் அடிப்படையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளது. முன்னர் கூறியபடி பன்மை ஒட்டு பெயர்ப்பகுதியுடன் சேர்க்கப்படுகிறது; பெயரின் திரிபு அடியுடன் சேர்க்கப்படுவதில்லை. பன்மை ஒட்டிற்கு *கள்*, *க்கள்* என்ற இருமாற்ருருபுகள் இருக்கின்றன. அவற்றின் வருகை பின்வருமாறு அமையும்: *க்கள்* நெட்டுயிர் இறுதியில் வரும் எல்லாப் பெயர்களுடனும் இரண்டு குற்றுயிர் உள்ள அசைகளைக் கொண்ட உ என்ற குற்றுயிரால் இறுதியுறும் பெயர்களுடனும் சேர்ந்து வரும்; பிற இடங்களில் *கள்* வரும்.

ஒருமைப் பெயர் - பன்மைப் பெயர் ஒருமைப்பெயர் - பன்மைப் பெயர்

பூ - பூ- க்கள் கண் - கண்- கள்

ஈ -	ஈ- க்கள்	மரம் -	மரங்- கள்
பசு -	பசு- க்கள்	வீடு -	வீடு-கள்
தெரு -	தெரு- க்கள்	கல் -	கற்- கள்

4.2.5. வேற்றுமைக் குறியீடு/உருபு

பெயர் அல்லது பெயர்த்தொடருக்கும் வினைக்கும் அல்லது இரண்டு பெயரகளுக்கும் அல்லது பெயர்த்தொடர்களுக்கும் இடையில் வரும் தொடரியல் மற்றும் பொருண்மையியல் உறவுகளை வேற்றுமை வெளிப்படுத்தும். வினைப் பயனிலைகள் ஒரு வாக்கியத்தில் கட்டாய மற்றும் விருப்புப் பங்கெடுப்பாளர்களை எடுக்கும் (எ.கா. எழுவாய்ப் பெயர்த் தொடர்கள், செயப்படுபொருள், பெயர்த்தொடர்கள், வினையடைகள்). இவ்வாறு வேற்றுமைக் குறியீடுகள் (**உருபுகள்**) பெயர்த்தொடருக்கும் வினைப் பயனிலைக்கும் இடையிலுள்ள தொடரியல் மற்றும் பொருண்மையியல் உறவை வெளிப்படுத்துகிறது. அதாவது அவை ஒரு பங்கெடுப்பாளர் பெயர்த் தொடரின் இலக்கணச் செயன்மையைக் காட்டும் (எ.கா. எழுவாய் செயல்படு பொருள்). மேலும் அவை பயனிலையாக்கத்தில் பங்கெடுப்பாளர் பெயர்த்தொடரின் பொருண்மையியல் பங்களிப்பை வெளிப்படுத்தும் (எ.கா. ஒரு செயலின் அல்லது நிகழ்வின் காரணம், நிகழ்வு அல்லது நிலையின் இடம், இயக்கத்தின் மூலம் அல்லது இலக்கு). உடைமை வேற்றுமை இரண்டு பெயர்த்தொடருக்கு இடையில் உள்ள உறவை வெளிப்படுத்தும்.

உருபனியல், தொடரியல் அடிப்படையில் வேற்றுமைக் குறியீடு இரு வழிகளில் உருப்படுத்தம் செய்யப்படுகிறது.

1. வேற்றுமைப் பின்னொட்டுகளால்

2. பின்னுருபுகளால் (இவற்றில் சில கட்டுண்ட வடிவுகள்)

பின்னொட்டுக்களைப் பொறுத்தவைரையில் வேற்றுமைக் குறிப்பு வேற்றுமை பின்னொட்டு மற்றும் பின்னுருபு இவற்றின் ஒன்றுசேர்க்கையால் உருப்படுத்தம் செய்யப்படுகிறது. எடுத்துக்காட்டாகக் கருவியின் பொருணமைப் பங்களிப்பு *ஆல்* என்ற பின்னொட்டாலும் (எ.கா. *சாவியால்*) மூலம் என்ற பின்னுருபாலும் (எ.கா. *சாவி மூலம்*) வெளிப்படுத்தலாம் இறுதியாகக் கருவியின் பொருண்மையியல் பங்களிப்பை ஒரு வேற்றுமைப் பின்னொட்டை ஆளும் பின்னுருபால் வெளிப்படுத்தலாம். கொண்டு என்ற பின்னுருபு இரண்டாம் வேற்றுமை உருவான *ஐ*-யை ஆளுகை செய்யும் (எ.கா. *சாவியைக் கொண்டு*). தற்காலத் தமிழில் ஆறு வேற்றுமைப் பின்னொட்டுகள் இருக்கின்றன.

வேற்றுமை	**பின்னொட்டுகள்**
செயப்படுபொருள்	ஐ
கொடைவேற்றுமை	(உ)க்கு
கருவி வேற்றுமை	ஆல்
உடன்நிகழ்ச்சி வேற்றுமை	ஓடு
இட வேற்றுமை	இல்
உடைமைப்பொருள் வேற்றுமை	அது

ஐந்து கட்டுண்ட பின்னுருபுகள் இருக்கின்றன.

கட்டுண்ட வேற்றுமை	**கட்டுண்ட பின்னுருபுகள்**
இடவேற்றுமை	இடம்
உடன்நிகழ்ச்சி வேற்றுமை	உடன்
மூல வேற்றுமை	இருந்து
பயனடை வேற்றுமை	ஆக

மரபு இலக்கணவியலார் வேற்றுமைப் பின்னொட்டு**க்**களையும் *ஆக* தவிர பிற கட்டுண்ட பின்னுருபுகளையும் பல இடப் பின்னுருபுகளையும் வேற்றுமை குறிகளாக எடுத்தாண்டனர். இக்குறிகளின் அடிப்படையில் அவர்கள் எட்டு வேற்றுமைகளை வேறுபடுத்தினர். இவைகள் அவற்றின் ஒலியனியல் வடிவத்தாலோ வரிசை எண்ணாலோ அடையாளப்படுத்தப்பட்டன. வேற்றுமைக் குறியீட்டால் குறிப்பிடப்படாத விளி வேற்றுமையும் அவர்கள் சேர்த்துக்கொண்டனர். பின்னர் மேனாட்டு இலக்கணத்தார்கள் இல**க்கண**த்தின் அல்லது சமஸ்கிருத இலக்கணக் கலைச்சொற்களைப் பயன்படுத்தி வேற்றுமை குறியின் செயல்பாடு அடிப்படையில் எட்டு வேற்றுமைகளை புலக்குறிப்பு செய்தனர்

1. எழுவாய் வேற்றுமை
2. செயல்படு பொருள் வேற்றுமை
3. கொடை வேற்றுமை
4. கருவி வேற்றுமை
5. உடன்நிகழ்ச்சி வேற்றுமை
6. இட வேற்றுமை

7. நீங்கல் வேற்றுமை

8. உடைமை வேற்றுமை

9. விளி வேற்றுமை

வேற்றுமைக் குறிகளின் மேற்சொன்ன புலக்குறிப்புகள் ஒரு வேற்றுமைக் குறியின் பொருண்மையை முழுவதுமாக உருப்படுத்தம் செய்யவில்லை; ஏனென்றால் அவை அவற்றின் செயல்பாடுகளில் ஒன்றைத்தான் வெளிப்படுத்துகின்றது. எடுத்துக்காட்டாகக் கருவி வேற்றுமைப் பின்னொட்டு என்று புலக்குறிப்பு செய்யப்பட்ட *ஆல்* என்ற வேற்றுமைப் பின்னொட்டு கருவிச் செயல்பாட்டை வெளிப்படுத்துவதுடன் பிற கருத்துக்களையும் வெளிப்படுத்துகின்றன.

வேற்றுமை அடையாளக் குறியீட்டைப் பொருத்தவரையில் பின்வரும் பாகுபாட்டு அடிப்படையில் விளக்கலாம்:

1. வேற்றுமைப் பின்னொட்டு

2. கட்டுண்ட பின்னுருபுகள்

3. பின்னுருபுகள் (சுதந்திரமான வடிவுகள்)

பின்வரும் அட்டவணை வேற்றுமை உருபுகளையும் அவற்றின் வருகை முறைகளையும் அவற்றின் வேறுபட்ட செயல்பாடுகளையும் தரும்:

வேற்றுமை	**பின்னொட்டு/ பின்னுருபு**	**வருகை முறை**	**பொருள்/ செயல்பாடு**
1. எழுவாய் வேற்றுமை	-Ø		**எழுவாய்** எ.கா. *ராமன் வந்தான்* **பயனிலை**

			எ.கா. *குமரன் மாணவன்* **எழுவாய் நிரப்பி** எ.கா. குமரன் *மாணவன்* ஆவான் **செயப்படுபொருள் நிரப்பி** எ.கா. குமரன் *ராமனைத் தலைவன்* ஆக்கினான் **செயப்படுபொருள்** எ.கா. குமார் *தண்ணீர்* கேட்டான்
2. செயப்படு பொருள் வேற்றுமை	-ஐ		**செயப்படு பொருள்** எ.கா. ராமன் பையனை பார்த்தான்
3. கொடை வேற்றுமை	-க்கு~ -உக்கு~-கு	பெயர்களின் மற்றும் மாற்றுப் பெயர்களின் திரிபுப் பகுதியுடன் *-க்கு* வரும். எ.கா. மரத்து-க்கு பலவற்று-க்கு, ஆற்று-க்கு, என-க்கு	**அயற்செயப்படு பொருள்** எ.கா. குமார் *அப்பாவுக்கு* ஒரு படத்தைக் காட்டினான் **இயக்கத்தின் இலக்கு** எ.கா. குமார் *அப்பாவுக்கு* ஒரு கடிதம் கொடுத்தான் **காரணம்**

		இ/ஈ/ஐ/அய் என்று முடியும் பெயரடிகளுடன் *க்கு* வரும் எ.கா. தம்பிக்கு, ஈக்கு, சட்டைக்கு நாய்க்கு, படிப்புக்கு பிற எல்லாப் பெயரடிகளுக்குப் பின் *உக்கு* வரும். எ.கா. அம்மா-உக்கு, பால்-உக்கு, தெரு-வ்-உக்கு, பையன்-உக்கு, பெண்ண்-உக்கு கு ஒலிநிரவல் சாரியை *இன்*, *அன்* என்பனவற்றைத் தொடர்ந்து வரும் எ.கா.	எ.கா. குமார் *பணத்துக்குத்தான்* வேலை செய்கிறான் **அனுபவிப்பவர்** எ.கா. *குமாருக்கு* ஒரு புத்தகம் இருக்கிறது. **காலத்தின் கூறு** எ.கா. குமார் *ஐந்து மணிக்கு* வருவான் **விகிதம்** எ.கா. மருந்து ஒரு *நாளைக்கு* மூன்று வேளை சாப்பிடு **பகிர்ந்தளிப்புச் செயல்பாடு** எ.கா. *ஆளுக்கு* ஒரு டீ போடு **ஒப்புமை மாதிரி** எ.கா. *குமாருக்கு* இவன் நல்லவன் **குறிப்பிடும் இடம்** எ.கா. *மதராசுக்கு* நூறு மைல் பின்னால்

		பசு+இன்+கு> பசுவிற்கு, அது+அன்+கு அதற்கு	
4. **பயனடை வேற்றுமை**	-க்கு-ஆக ~ -உக்கு-ஆக ~ -கு-ஆக	க்கு-ஆக எ.கா. நாய்-க்கு-ஆக உக்கு-ஆக எ.கா.அவன்-உக்கு- ஆக கு- ஆக எ.கா.பசுவிற்-கு-ஆக	**பயனடைவு** எ.கா. ராஜா தன் பையனுக்காகப் பணம் சேர்த்தான் **காரணம்** எ.கா. ராஜா தன் *அப்பாவுக்காகச்* சீக்கிரம் வீட்டுக்கு வாந்தான்
5. **கருவி வேற்றுமை**	-ஆல்		**கருவி** எ.கா. குமார் கத்தியால் பழத்தை வெட்டினான் **வழி** எ.கா. குமார் தன் கண்ட *அனுபவத்தால்* இதைக் துளைக்கக் கற்றுக்கொண்டான். **மூலம்/ உருபொருள்**

			எ.கா. குமார் *மண்ணால்* இந்தப் பந்தைச் செய்தான். **காரணம்-1** எ.கா. *வெயிலால்* குமார் வரவில்லை. **காரணம் -2** எ.கா. *மழையால்* பயிர் நன்றாக வளர்ந்தது
6. உடனிகழ்ச்சி வேற்றுமை	-ஓடு/ -உடன்		**உடனிகழ்ச்சி** எ.கா. குமார் தன் *மனைவி-ய் -ஓடு/-உடன்* வந்தான் **முறை** எ.கா. குமார் *அன்ப்-ஓடு/*-உடன் சிரித்தான். **வழி** எ.கா குமார் அப்பாவின் *உதவி-ய்-ஓடு/*-உடன் இதைப் படித்தான். **அதிகப்படி**

			எ.கா. ராஜா நான்கு *இட்லியோடு* இரண்டு தோசையும் சாப்பிட்டான். **இடம்** எ.கா. குமார் *வீட்டோடு* இருக்கிறான். **திசை** எ.கா. குமார் *தெருவோடு* நடந்தான் **உட்படுதல்** எ.கா. சித்திரை *மாசத்தோடு* தமிழ் வருஷம் ஆரம்பிக்கிறது. **வரையறை** எ.கா. இந்த ஊரில் ஒரு *கோயிலோடு* சரி
7. இட வேற்றுமை	-இல்		**இடத்தில் இடம்** எ.கா. *குருவி* மரத்தில் உட்கார்ந்திருக்கிறது. **காலத்தின் புள்ளியிடம்** (எதிர்காலத்துடன்)

			எ.கா. ராஜா *ஒரு வாரத்தில்* வருவான். **கால அளவு** (இறந்த காலத்துடன்) எ.கா. ராஜ ஒருவாரத்தில் இந்த புத்தகத்தைப் படித்தான். **பாங்கு** எ.கா. குமார் தமிழில் பேசினான் **இடைபடு உறவு** எ.கா. அந்த மாம்பழங்களில் சில மல்கோவா. அந்த மாணவர்களில் சிலர் நன்றாக படிப்பவர்கள்.
	-இடம்		**இயக்கத்தின் இலக்கு** எ.கா. ராஜா *அப்பாவிடம்* வந்தான். **கைமாற்றத்தின் மூலம்** எ.கா. ராஜா *மந்திரியிடம்* ஒரு பரிசு வாங்கினான். **உணர்ச்சியின் இலக்கு**

			எ.கா. ராஜா *அப்பாவிடம்* கோபப்பட்டான்.
நீக்கல் வேற்றுமை	-இல்/-இடம்– இருந்து, இருந்து	இட வேற்றுமைக்குத் திரிபுற்ற பெயரைத் தொடர்ந்து வரும் **.** எ.கா. மரத்தில் – இருந்து பையனிடம் – இருந்து நேரடியாக இடப்பகுதியுடன் வரும். எ.கா. அங்க்- இருந்து மேல்- இருந்து *-இல்* என்ற இடவேற்றுமைப் பின்னொட்டிற்குத் திரிபுற்ற விலங்கினப் பெயர்களுடன் வருகையிலும் -	**இயக்கத்தின் மூலம்** எ.கா. ராஜா *கோவிலிலிருந்து* வந்தான். **உள்ளத்திலிருந்து பிரிதல்** எ.கா. ராஜா தன் அப்பாவை *நெருப்பிலிருந்து/ ஒரு புலியிடமிருந்து* காப்பாற்றினான். **தேர்வின் மூலம்** எ.கா. ராஜா *மாணவர்களிலிருந்து* ஒரு நல்லவனைத் தேர்ந்தெடுத்தான். **தொடர்ச்சியின் தொடக்கம்** எ.கா. *மந்திரியிலிருந்து* எல்லோரும் லஞ்சம் வாங்குகிறார்**கள்**.

		இடம் என்ற இட வேற்றுமைப் பின்னொட்டிற்குத் திரிபு விலங்கினப் பெயர்களுடன் வருகையிலும் - *இருந்து* அதன் செயல்பாடுகளில் (பொருள்களில்) வேறுபடும் (பார்க்க அடுத்தப்பக்கத்தில்)	
உடைமை வேற்றுமை	-இன், - உடைய, - அது, பெயர்திரிபு அடி	**திரிபு வடிவில் பெயர்** எ.கா. மரத்துக்கிளை **பெயர்** + **ஒலிநிரவல்** – *இன்* எ.கா. *அரசனின்* முடி **பெயர்** + **உடைமை வேற்றுமை** *அது*	**பெயரடையாகச் செயல்படுகிறது** எ.கா. பள்ளிக்கூடம் குமாருடையது.

		எ.கா.அரசனது முடி **பெயர் + இடைநிலை சாரியை + உடைமைப் பின்னொட்டு** எ.கா. *நாயினது* வால் **பெயரடைப் பின்னொட்டு உடைய** எ.கா. *நாயினுடைய* வால்	

4.2.5.1. வேற்றுமை அடுக்குகள்

பெயர்கள் வேற்றுமைகளுக்காக திரிபுறுவதைக் கருத்தில் கொண்டு இரண்டு பெயர்களின் வேற்றுமை சார் அடுக்குகள் கீழே தரப்பட்டுள்ளன, ஒன்று அஃறிணைக் கால் என்பதற்காகவும் மற்றொன்று பன்மைப் பெயர் பையன் என்பதற்காகவும் வேற்றுமை அடுக்குகள் தரப்பட்டுள்ளன.

வேற்றுமை	**ஒருமை**	**பன்மை**
எழுவாய்வேற்றுமை	கால்	கால்-கள்

செயப்படுபொருள்வேற்றுமை	கால்-ஐ	கால்-கள்-ஐ
கொடை வேற்றுமை	கால்-உக்கு	கால்-கள்-உக்கு
நன்மை வேற்றுமை	கால்-உக்கு-ஆக	கால்-கள்-உக்கு-ஆக
கருவி வேற்றுமை	கால்-ஆல்	கால்-கள்-ஆல்
உடனிகழ்சி வேற்றுமை	கால்-ஓடு, கால்-உடன்	கால்-கள்-ஓடு, கால்கள்-உடன்
இட வேற்றுமை	கால்-இல்	கால்-கள்-இல்
நீங்கல் வேற்றுமை	கால்-இல்-இருந்து	கால்-கள்-இல்-இருந்து
உடைமை வேற்றுமை	கால்-இன் –அது	கால்-கள்-அது

வேற்றுமை	**ஒருமை**	**பன்மை**
எழுவாய்வேற்றுமை	பையன்	பையன்-கள்
செயப்படுபொருள்வேற்றுமை	பையன்-ஐ	பையன்-கள்-ஐ
கொடை வேற்றுமை	பையன்-உக்கு	பையன்-கள்-உக்கு
நன்மை வேற்றுமை	பையன்-உக்கு-ஆக	பையன்-கள்-உக்கு-ஆக

கருவி வேற்றுமை	பையன்-ஆல்	பையன்-கள்-ஆல்
உடனிகழ்சி வேற்றுமை	பையன்-ஓடு, பையன்-உடன்	பையன்-கள்-ஓடு, பையன்கள்-உடன்
இட வேற்றுமை	பையன்-இடம்	பையன்-கள்-இடம்
நீங்கல் வேற்றுமை	பையன்-இல்-இருந்து	பையன்-கள்-இல்-இருந்து
உடைமை வேற்றுமை	பையன்-இன் – அது	பையன்-கள்-அது

4.2.5.2. வேற்றுமை உருபுகளும் சந்தி விதிகளும்

இராசேந்திரன் (Rajendran, 2000) தமது தமிழ் உருபனியல் ஆய்வி உருவாக்கதிற்கு (Tamil Morphological Analyzer) வேண்டி தமிழ்ப் பெயர்ச்சொற்களைச் சந்திவிதிகளைக் கருத்திற்கொண்டு பாகுபாடு செய்கையில் பின்வரும் சந்திவிதிகளைப் பட்டியலிடுகின்றார் (இராசேந்திரன், 1994:47-56). **இது பெயர்களை அவற்றின் எண் மற்றும் வேற்றுமைத் திரிபின் அடிப்படையில் வகைபடுத்த உதவும்**.

1. *ஆ, ஓ, ஊ* என முடியும் பெயர்களைத் தொடர்ந்து உயிர்த் தொடக்க வேற்றுமைப் பின்னொட்டுகள் (உ.வே.பி.) வரும்போது *வ்* என்ற உடன்படுத்தி இடையில் வரும்.

-ஆ/ஓ/ஊ + உ.வே.பி→-ஆ/ஓ/ஊ- வ்- உ.வே.பி.

எ.கா.

கடா + ஐ > கடாவை

கடா + ஆல் > கடாவால்

கடா + ஓடு >கடாவோடு

கடா + உடன் > கடாவுடன்

கடா + உக்கு >கடாவுக்கு

கடா + இன் > கடாவின்

கடா + இல் > கடாவில்

2. *இ, ஈ, ஐ* என்று முடியும் பெயர்கள் -*உக்கு* தவிர்த்த பிற வேற்றுமைப் பின்னொட்டுகளை ஏற்கும்போது *ய்* என்ற உடன்படுத்தி ஒலி இடையில் வரும்.

-இ/ஈ/ஐ + உக்கு தவிர்த்த உ.வே.பி. →இ/ஈ/ஐ–ய்-உ.வே.பி

எ.கா.

எலி + ஐ > எலியை

எலி + ஆல் > எலியால்

எலி + ஓடு > எலியோடு

எலி + உடன் > எலியுடன்

எலி + இன் > எலியின்

எலி + இல் > எலியில்

3. *இ, ஈ, ஐ, ய்* என்று முடியும் பெயர்கள் முவரும் வேற்றுமைப் பின்னொட்டு -*உக்கு* என்பதன் உ கெடும்

-இ/ஈ/ஐ/ய் + உக்கு→இ/ஈ/ஐ/ய்-க்கு

எ.கா.

எலி + உக்கு > எலிக்கு

ஈ + உக்கு > ஈக்கு

யானை + உக்கு > யானைக்கு

நெய் + உக்கு > நெய்க்கு

4. உ-வில் முடியும் பெயர்களை அவற்றின் சந்திச் செயல்பாடு அடிப்படையில் நான்கு வகைகளாகப் பிரிக்கலாம்

4.1. (C)VV-ட்-உ என்ற அசை அமைப்பக் கொண்ட சொற்களைத் தொடர்ந்து உயிர்த் தொடக்க வேற்றுமைப் பின்னொட்டுக்கள் வரும்போது உ கெட, ட் இரட்டிக்கும்.

(C)VV ட் – உ + உ.வே.பி →(C)VVட்ட் – உ.வே.பி

எ.கா.

காடு+ஐ > காட்டை

காடு+ஆல் > காட்டால்

காடு+ஓடு > காடோடு

காடு+உடன்> காட்டுடன்

காடு+உக்கு > காட்டுக்கு

காடு+இன் > காட்டின்

காடு+இல் > காட்டில்

4.2. *று*-வில் முடியும் பெயர்களைத் தொடர்ந்து உயிர்த்தொடக்க வேற்றுமைப் பின்னொட்டுக்கள் வரும்போது உ கெட *ற்* இரட்டும்.

-று + உ.வே.பி → ற்ற் – உ.வே.பி.

4.3. (C)VCC-உ அல்லது (C)VVC-உ என்ற அசை அமைப்புடைய பெயர்களைத் தொடர்ந்து உயிர்த்தொடக்க வேற்றுமைப் பின்னொட்டுகள் வருகையில் உ கெடும்

(C)VCC-உ + உ.வே.பி. → CVCC-உ.வே.பி

எ.கா.

வண்டு+ஐ > வண்டை

வண்டு+ஆல் > வண்டால்

வண்டு+ஓடு > வண்டோடு

வண்டு+உடன் > வண்டுடன்

வண்டு+உக்கு > வண்டுக்கு

வண்டு+இன் > வண்டின்

வண்டு+இல் >வண்டில்

காது+ ஐ > காதை

காது+ ஆல் > காதால்

காது+ ஓடு > காதோடோடு

காது+ உடன் > காதுடன்

காது+ உக்கு > காதுக்கு

காது+ இன் > காதின்

காது+ இல் > காதில்

4.4 (C)VCV என்ற அசையமைப்பைக் கொண்டு உ-வில் முடியும் பெயர்களைத் தொடர்ந்து உயிர்த் தொடக்க வேற்றுமை ஒட்டுகள் வரும்போது *வ்* என்ற உடன்படுத்தி இடையில் வரும்.

(C)VC-உ + உ.வே.பி.→ (C)VC-உ-வ்-உ.வே.பி.

பசு+ ஐ > பசுவை

பசு+ஆல் > பசுவால்

பசு+உக்கு > பசுவுக்கு

பசு+ ஓடு > பசுவோடு

பசு+உடன் > பசுவுடன்

பசு+இன் > பசுவின்

பசு +இல் > பசுவில்

5. (C)VC என்ற அசை அமைப்புடைய *ண், ல், ள், ன்* என முடியும் பெயர்களைத் (ஓரசைச் பெயர்களை) தொடர்ந்து உயிர் தொடக்க வேற்றுமைப் பின்னொட்டுகள் வர முறையே *ண், ய், ல், ள், ன்* என்பன இரட்டும். (விதிவிலக்கு *ய் + உக்கு > ய்க்கு*. எ.கா. *நெய் + உக்கு > நெய்க்கு*)

(C)Vண்/ய்/ல்/ள்/ன் + உ.வே.பி→ (C)Vண்ண்/ய்ய்/ல்ல்/ள்ள்/ன்ன்.

உ.வே.பி.

கண்+ ஐ > கண்ணை

கண்+ஆல் >கண்ணால்

கண்+உக்கு > கண்ணுக்கு

கண்+ஓடு > கண்ணோடு

கண்+உடன் > கண்ணுடன்

கண்+இன் > கண்ணின்

கண்+உடைய > கண்ணுடைய

கண்+அது > கண்ணது

கண்+இல் > கண்ணில்

நெய்+ ஐ > நெய்யை

நெய்+ஆல் > நெய்யால்

நெய்+உக்கு > நெய்க்கு

நெய்+ஓடு > நெய்யோடு

நெய்+உடன் > நெய்யுடன்

நெய்+இன் > நெய்யின்

நெய் +உடைய > நெய்யுடைய

நெய்+அது > நெய்யது

நெய்+இல் > நெய்யில்

கல்+ ஐ > கல்லை

கல்+ஆல் > கல்லால்

கல்+உக்கு > கல்லுக்கு

கல்+ஓடு > கல்லோடு

கல்+உடன் > கல்லுடன்

கல்+இன் > கல்லின்

கல்+உடைய > கல்லுடைய

கல்+அது > கல்லது

கல்+இல் > கல்லில்

முள்+ ஐ > முள்ளை

முள்+ஆல் >முள்ளால்

முள்+உக்கு >முள்ளுக்கு

முள்+ஓடு >முள்ளோடு

முள்+உடன் > முள்ளுடன்

முள்+இன் > முள்ளின்

முள் + உடைய > முள்ளுடைய

முள்+அது > முள்ளது

முள்+இல் >முள்ளில்

பொன்+ ஐ > பொன்னை

பொன்+ ஆல் > பொன்னால்

பொன்+உக்கு > பொன்னுக்கு

பொன்+ஓடு > பொன்னோடு

பொன்+உடன் > பொன்னுடன்

பொன்+இன் > பொன்னின்

பொன்+உடைய > பொன்னுடைய

பொன்+அது > பொன்னது

பொன்+இல் > பொன்னில்

6. *அம்* ஈற்றுப் பெயர்களைத் தொடர்ந்து உயிர்த்தொடக்க வேற்றுமைப் பின்னொட்டுக்கள் வரும்போது *ம்* கெட *த்த்* என்ற சாரியை இடையில் வரும்.

-அம் + உ.வே.பி.→-அ-த்த்-உ.வே.பி.

மரம்+ஐ > மரத்தை

மரம்+ஆல் > மரத்தால்

மரம்+உக்கு > மரத்துக்கு

மரம்+ஓடு > **மரத்தோடு**

மரம்+உடன் > மரத்துடன்

மரம்+இன் > மரத்தின்

மரம்+உடைய > மரத்துடைய

மரம்+அது > மரத்தினது

மரம்+இல் > மரத்தில்

6. *அ* ஈற்றுப் பெயர்களான *பல*, *சில* என்பனவற்றைத் தொடர்ந்து உயிர்த்தொடக்க வேற்றுமைப் பின்னொட்டுகள் வரும்போது *அற்ற்* என்ற சாரியை இடையில் வரும்.

பல + உ.வே.பி.(பல-வ்-அற்ற்-உ.வே.பி.

பல+ ஐ > பலவற்றை

பல+ஆல் > பலவற்றால்

பல+உக்கு > பலவற்றுக்கு

பல+ஓடு>பலவற்றோடு

பல+உடன் > பலவற்றுடன்

பல+இன் > பலவற்றின்

பல + உடைய > பலவற்றுடைய

பல + அது > பலவற்றினது

பல + இல் >பலவற்றில்

8. எல்லாம் என்ற பெயரைத் தொடர்ந்து உயிர்த்தொடக்க வேற்றுமைப் பின்னொட்டுக்கள் வரும்போது *ம்* கெட *அற்ற்* என்ற சாரியை இடையில் வரும்.

எல்லாம் + உ.வே.பி.→எல்லா-வ்-அற்ற் – உ.வே.பி.

எல்லாம் + ஐ > எல்லாவற்றை

எல்லாம் +ஆல் > எல்லாவற்றால்

எல்லாம் +உக்கு > எல்லாவற்றுக்கு

எல்லாம் +ஓடு>எல்லாவற்றோடு

எல்லாம் +உடன் > எல்லாவற்றுடன்

எல்லாம் +இன் > எல்லாவற்றின்

எல்லாம் +உடைய > எல்லாவற்றுடைய

எல்லாம் +அது > எல்லாவற்றினது

9. 5-ஆம் 6- ஆம் விதிகளுக்கு உட்படாத *ண், ல், ள், ன்* மற்றும் *ர், ழ்* என முடியும் பெயர்களைத் தொடர்ந்து உயிர்த்தொடக்க வேற்றுமைப் பின்னொட்டுக்கள் வரும்போது அவை எந்தவித மாற்றமுமின்றி இணையும் (விதிவிலக்கு: *ய் + உக்கு > ய்க்கு*).

(5-ஆம், 6-ஆம் விதிக்கு உட்படாத) *-ண்/ ல்/ ள்/ ன்/ர்/ ழ்* + உ.வே.பி. (**ண்/ ல்/ ள்/ ன்/ர்/ ழ்** + **உ.வே.பி.**

எ.கா

தூண்+ ஐ > தூணை

தூண்+ஆல் >துணால்

தூண்+உக்கு > தூணுக்கு

தூண் +ஓடு >தூணோடு

தூண் + உடன் > தூணுடன்

தூண்+இன் > தூணின்

தூண்+உடைய >தூணுடைய

தூண்+அது > தூணது

தூண்+இல் > தூணில்

நாய்+ ஐ > நாயை

நாய்+ஆல்>நாயால்

நாய்+உக்கு>நாய்க்கு

நாய்+ஓடு>நாயோடு

நாய்+உடன் > நாயுடன்

நாய்+இன் > நாயின்

நாய் + உடைய > நாயுடைய

நாய் + அது > நாயது

நாய் + இல் > நாயில்.

கால் + ஐ > காலை

கால் + ஆல் > காலால்

கால் + உக்கு > காலுக்கு

கால் + ஓடு > காலோடு

கால் + உடன் > காலுடன்

கால் + இன் > காலின்

கால்+உடைய > காலுடைய

கால்+அது > காலது

கால்+இல் > காலில்.

வாள்+ ஐ > வாளை

வாள்+ஆல்>வாளால்

வாள்+ உக்கு > வாளுக்கு

வாள்+ ஓடு >வாளோடு

வாள்+ உடன் > வாளுடன்

வாள்+ இன் >வாளின்

வாள்+ உடைய > வாளுடைய

வாள்+ அது>வாளது

வாள்+ இல்>வாளில்.

மான்+ ஐ > மானை

மான்+ ஆல்>மானால்

மான்+ உக்கு >மானுக்கு

மான்+ ஓடு>மானோடு

மான்+ உடன் >மானுடன்

மான்+ இன்>மானின்

மான்+ உடைய >மானுடைய

மான்+ அது>மானது

மான்+ இல் > மானில்.

சுவர்+ ஐ > சுவரை

சுவர்+ ஆல் > சுவரால்

சுவர்+உக்கு > சுவருக்கு

சுவர்+ஓடு > சுவரோடு

சுவர்+ உடன் > சுவருடன்

சுவர்+ இன் > சுவரின்

சுவர்+ உடைய > சுவருடைய

சுவர்+ அது > சுவரது

சுவர்+இல்>சுவரில்.

இதழ்+ ஐ > இதழை

இதழ்+ ஆல்>இதழால்

இதழ்+ உக்கு >இதழுக்கு

இதழ்+ ஓடு >இதழோடு

இதழ்+ உடன் >இதழுடன்

இதழ்+ இன் >இதழின்

இதழ்+ உடைய >இதழுடைய

இதழ்+ அது>இதழது

இதழ்+ இல்>இதழில்.

10. *இன்* என்ற சாரியை ஒருமைப்பன்மைப் பெயர்ப்பகுதிகளைத் தொடர்ந்து வேற்றுமை உருபுகளுக்கு முன்னர் விருப்பாக வரும்.

எ.கா.

பசு + ஐ >பசுவினை

பசு + ஆல் >பசுவினால்

பசு + உக்கு >பசுவினுக்கு

பசு + ஓடு >பசுவினோடு

பசு + உடன் >பசுவினுடன்

பசு + உடைய >பசுவினுடைய

பசு + அது >பசுவினது

பசு + இல் >பசுவினில்.

4.3. சுருக்கவுரை

தமிழ்ப் பெயர்சொற்கள் பற்றிய வரலாற்று மொயியல் ஆய்வுக்கு உறுதுணையாக இவ்வியல் தரப்பட்டுள்ளது. சங்ககாலத் தமிழில் பெயர்சொற்களின் இலக்கண அமைப்பைப் அறிந்து கொண்டு அதைத்

தற்காலத் தமிழில் பெயர்ச் சொற்களின் இலக்கண அமைப்புடன் ஒப்பிட்டு வரலாற்று அடிப்படையிலான மாற்றங்களைப் புரிந்து கொள்ள இயலும் என்ற அடிப்படையில் இவ்வியலின் செய்திகள் அமைகின்றன. பெயர்சொற்களின் உருபனியல் அமைப்பு பற்றிய சுருக்கமான விளக்கம் தரப்பட்டுள்ளது. பெயர்கள் எண்களுக்கும் வேறுமைக்கும் திரிபுறுவது குறித்தும் வேற்றுமை ஏற்கும் போது பெயர்ப்பகுதிகள் திரிபுறுவது குறித்தும் விளக்கம் தரப்பட்டுள்ளது. வேற்றுமைக்குத் திரிபுறுவதன் காரணமாக பெயர்ப் பகுதி திரிபுற்ற பகுதி, திரிபுறாப் பகுதி என அமையும். பெயர்ப் பகுதியுடன் பன்மைப் பின்னொட்டு, திரிபு பின்னொட்டு, ஒலிநிரவல் பின்னொட்டு, வேற்றுமைப் பின்னொட்டு என்பன இணைவது குறித்து விளக்கம் தரப்பட்டுள்ளது. இறுதியில் பெயரடுக்கள் தரப்பட்டுள்ளன.